**Date** –10.07.2026

**அனிதா** **மனுதாரர் / எதிரி**

Vs

V. **முருகன்** **எதிர்மனுதாரர்/புகார்தாரர்**

**MP No**.9/2026 **in CC** 6/2019

**பொது உத்தரவு**

1. அசல் ஆவணங்களின் பரிசீலனையில், கடந்த 2019ல் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கானது, தற்போது எதிரி தரப்பு சாட்சிய விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில், இம்மனுவானது மனுதாரர்/எதிரியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் ஏற்கனவே முடிக்கப்பட்டுவிட்டது என்றும், வழக்கின் சரியான தீர்ப்புக்காக மனுதாரர்/எதிரி தனது தரப்பு சாட்சியாக ராஜகோபல் மகன் ரஜினி காந்தை விசாரணை செய்ய வேண்டும் என்றும், வழக்கின் உண்மைத் தகவல்களை நிரூபிக்க மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சியை விசாரணை செய்வது அவசியம் என்றும், அதனால் இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

2. எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் இம்மனு பொய்யானது மற்றும் சட்டத்தின் உண்மைத்தன்மைகளின் அடிப்படையில் விசாரணைக்கு உகந்ததல்ல என்றும், மனுதாரர்/எதிரி காவல்துறை அறிக்கையின் அடிப்படையில் எடுக்கப்படும் வழக்குகளுக்கான சட்டப்பிரிவுகளைப் பயன்படுத்தியுள்ளார் என்றும், தற்போதைய புகாரானது ஒரு தனிநபர் புகாரின் கீழ் தொடரப்பட்ட வழக்காகும் என்றும், இந்த மனு ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும் என்றும், சாட்சியளிக்க அழைக்கப்படும் சாட்சியின் விவரங்கள், அவருக்கும் மனுதாரருக்கும் உள்ள உறவுமுறை மற்றும் சாட்சியளிக்க இருக்கும் சாட்சியத்தின் தன்மை ஆகியவற்றை இம்மனுவில் வெளிப்படுத்தவில்லை என்பதால் இம்மனு நிராகரிக்கப்பட வேண்டியது என்றும், புகார்தாரர் குறுக்கு விசாரணைக்குத் தயாராவதற்கு இந்த விவரங்கள் அவசியம் என்றும், இம்மனு தள்ளுபடி

செய்யத்தக்கது என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

3. மேற்படி சங்கதிகளுக்குட்பட்டு, இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்று பார்க்கும் போது, ஆவணங்களின் பரிசீலனையில், பிரிவுகள் 313 (1) (b) வினாவிற்கு உட்படுத்திக் கொண்ட பொழுது ரஜினி காந்தை சாட்சியாக விசாரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள நிலையில், மேற்படி நபரை சாட்சியாக விசாரிக்க வேண்டும் என்று கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

4. அசல் வழக்கில் புகார்தாரருக்கு ஆதரவான தொடக்க அனுமானத்தை மறுத்தளிக்க வேண்டிய நிலையில் உள்ள எதிரி குறிப்பிட்டு சாட்சியத்தை விசாரிக்க வேண்டும் என்று கோரும் நிலையில், இம்மனுவினை அனுமதிப்பது நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி நபரை விசாரிக்கும் போது குறுக்கு விசாரணை செய்வதற்கு புகார்தாரருக்கு வாய்புகள் வழங்கப்படும் என்ற நிலையில், அசல் வழக்கின் தீர்வினை கருத்தில் கொண்டு தவறாக சட்டப்பிரிவு குறிப்பிடப்பட்டு விட்டது என்பதற்காக மட்டும் ஒரு மனுவை தள்ளுபடி செய்வது உகந்ததல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

5. முடிவாக, இம்மனுவானது செலவு தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

Sd-/-

நீதித்துறை நடுவர்,

விரைவு நீதிமன்றம் எண்.1 (நடுவர் நிலை),

கோயமுத்தூர்.